## களம் காணும் கழகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# ஈரோடு, கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று பிரச்சாரம்!

## மாபெரும் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுகிறார்!

**தமிழ்நாடு முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (மார்ச் 31ஆம் தேதி) திருவாரூரில் தொடங்கி பரப்புரை மேற்கொண்டார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதற்கட்டமாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், ஊரான திருவாரூரில் பரப்புரையை தொடங்கினார். தொடர்ந்து இன்று ஈரோடு, கோவையில் பரப்புரையை மேற்கொள்கிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**02.04.2026 (வியாழக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | **ஈரோடு** **சித்தோடு** (பொதுக்கூட்டம்) | பவானிசாகர், ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, அந்தியூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு கிழக்கு, பவானி |
| மாலை 5 மணி | **கோவை** **கொடிசியா மைதானம்** (பொதுக்கூட்டம்) | சூலூர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு, சிங்காநல்லூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை |

**குறிப்பு** : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திருவாரூரில் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கி திருவாரூர் தேரடி வீதியில் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தக் காட்சி!



தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவாரூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கழகக் கூட்டணி வேட்பாளர்களான திருவாரூர் தொகுதி பூண்டி கே.கலைவாணன், மன்னார்குடி தொகுதி டி.ஆர்.பி.ராஜா, திருத்துறைப்பூண்டி தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் மாரிமுத்து, எஸ்.டி.பி.ஐ. கட்சி, நன்னிலம் தொகுதி வேட்பாளர் முகமது முபாரக் ஆகியோரை அறிமுகப்படுத்தி உரையாற்றினார்.



திருச்சி மேற்கு தொகுதியில் தி,மு,க, சார்பில் போட்டியிடும் அமைச்சர் கே.என்.நேரு சாஸ்திரி ரோடு பகுதியில் இருந்து பிரச்சாரத்தை தொடங்கினார். தில்லைநகர், ரஹ்மானியபுரம், வாமடம் உள்ளிட்ட பகுதிகளில் அவர் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.அப்போது பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். அவருடன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், விஜயலட்சுமி கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் டோல்கேட் சுப்பிரமணி, காஜாமலை விஜய், கமால் முஸ்தபா நாகராஜ், வழக்கறிஞர் கவியரசன் மணிவண்ண பாரதி அந்தோணி சுரேஷ் ,முத்து பழனி, சோழன் சம்பத், திருநாவுக்கரசு எம் ஆர் எஸ் குமார், இளையராஜா உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.